





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 03.12.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்



- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- **இந்திய - இங்கிலாந்து** நாடுகளுக்கிடையே கப்பற்படை ஒத்துழைப்பு மற்றும் கப்பற்படை தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் தொடர்பான, **“KONKAN-18” இருதரப்பு கூட்டுக் கடற்படை பயிற்சி நவம்பர் 28 முதல் டிசம்பர் 6 வரை கோவாவில்** நடைபெற்று வருகிறது.
    - “KONKAN” கடற்பயிற்சியானது 2004 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

- சமீபத்தில் புதுடெல்லியில் நடைபெற்ற **38-வது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில்** (IITF- Indian International Trade Festival) **சிறந்த மாநிலமாக உத்திரகாண்ட் மாநிலம் தேர்வு** செய்யப்பட்டுள்ளது.
    - சுற்றுலாத் திட்ட மேம்பாடு, கேதார்நாத் புணரமைப்புத் திட்டம், இயற்கைத் தேனீ போன்ற உள்ளூர் உற்பத்தி பொருட்களை ஊக்குவிக்கவும் உத்தரகண்ட் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் **69-வது குடியரசு தின** விழாவில் (ஜனவரி 26 2019) **சிறப்பு விருந்தினராக தென்ஆப்பிரிக்க** அதிபர் **“சிரில் ரமபோசா” பங்கேற்க உள்ளார்**. ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அர்ஜன்டீனா நாட்டின் பியூனஸ் அயர்ஸ் சென்றுள்ள பிரதமர் மோடி, தென்னாப்பிரிக்கா அதிபர் ராம்போசாவை சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார்.
- குறிப்பு:
    - 2022- ஆம் ஆண்டில் ஜி-20 மாநாடு இந்தியாவில் நடைபெறும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். 2022-இல் ஜி 20 மாநாட்டை இத்தாலி நடத்துவதாக இருந்தது. இந்தியாவுக்காக அந்நாடு வாய்ப்பை விட்டுக் கொடுத்துள்ளது.

- **நாடு முழுவதும்** அவசர உதவிக்கு **ஒரே எண்ணை அழைக்கும்** திட்டத்தின் கீழ் மத்திய அரசானது “**112 இந்தியா** என்ற **செயலியை** அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இச்செயலில் ஷௌட் (சத்தமிடுதல்) என்னும் புதிய சிறப்பம்சம் பெண்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் இராஜ்நாத்


WeShine Academy™

சிங் அறிவுத்துள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- **அமெரிக்காவில் கடவுச்சீட்டு வழங்கும்** முறையை **எளிமைப்படுத்துவதற்காக**, முக்கிய நகரங்களில் உள்ள **இந்திய தூதரகங்களில் கடவுச்சீட்டு சேவை** திட்டத்தை **மத்திய அரசு தொடங்கியுள்ளது**.
  - அமெரிக்காவின் வாசிங்டன், அட்லாண்டா, சிகாகோ, ஹீஸ்டன், நியூயார்க், சன்.ஃ.பிரான்சிஸ்கோ ஆகிய நகரங்களில் உள்ள இந்தியத் தூதரகங்களில் கடவுச்சீட்டு சேவை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற்ற **போர்ச்சுக்கல் ஜீனியர் மற்றும் கேட் ஓமன் டென்னிஸ்** 'போட்டியின் ஆடவர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் **இந்தியாவின் "மானவ் தாக்கர்" சாம்பியன் பட்டம்** வென்றுள்ளார்.
  - இரட்டையர் பிரிவில் மானவ் தாக்கர், மனுஷ் ஷாவுடன் இணைந்து 'சாம்பியன்' பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்தியாவில் **இணைய தள வேகத்தை அதிகரிக்கக் கூடியதும்**, இதுவரை இல்லாத **அதிக எடை கொண்டதுமான** செயற்கை கோளான **GSAT-11 என்னும் செயற்கை கோளை இஸ்ரோவானது** வரும் **டிசம்பர் 5**-ஆம் தேதி யுரோப்பியாவின் **ஏரியன் - 5 (Arian-5)** இராக்கெட் மூலம் பிரெஞ்சு கயானாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட இருக்கிறது.
  - இச்செயற்கைகோள் சுமார் 5-9 டன் எடை கொண்டது.

## நியமனங்கள்

- சமீபத்தில் நடைபெற்ற **மெக்சிகோ நாட்டின் அதிபருக்கான** தேர்தலில், இடது சாரி கட்சியைச் சேர்ந்த **“ஆண்ட்ரேஸ் மனுவேல் லோபஸ்” பதவியேற்றுக் கொண்டார்**.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு தினம் - டிசம்பர் 02 (International Day For the Abolition of Slavery-2018)**
    - ஆள் கடத்தல், குழந்தை தொழிலாளர், கட்டாய திருமணம் போன்றவற்றை தடுப்பதற்காகவும், சர்வதேச அளவில் அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 2-ம் தேதி சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு தினமாக ஐ.நா பொதுசபையால் அனுசரிக்கப்படுகிறது.
    - இத்தினம் 1986 ஆம் ஆண்டு முதன் முதலில் கடைபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy